[14th March 1960

THE HON. SRI P. KAKKAN ; எங்கெங்கு மின்சாரம் நமக்கு அதிகமாக கிடைக்கிறதோ அங்கெல்லாம் மின்சார விசிறி வசதி கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பம். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

Photographic materials

* 338 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any shortage is felt in the availability of photographic materials in the State; and

(*b*) the steps taken to improve the position?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) In March 1958, the South Indian Photographic and Allied Trades Association represented to this Government about the shortage in the availability of photographic materials. In the light of these representations, this Government suggested to the Government of India that the import policy in regard to photographic materials should be reviewed and a steady quota for imports given. Some reliefs were granted by the Government of India by increasing the quota for imports. We have not received any further representations in the matter in recent months.

SRI N. K. PALANISAMI : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதைவிட இங்கேயே இதற்காக ஒரு யூனிட்டு ஆரம்பிப்பதாக அரசாங்கத்தினிடம் ஒரு யோசனை இருந்து வந்ததல்லவா? அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : மேல்நாட்டு கம்பெனிகள் நீலகிரியில் போட்டோ பிலிம் உற்பத்தி செய்வதற்காக நமது அரசாங்கத்தை (ஆபர்) கேட்டிருந்தார்கள் அல்லவா? அது இப்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இவற்றிற்கு எல்லாம் எப்படி பதில் சொல்ல முடியும். ஆனால் மூலக்கேள்வி இறக்குமதியைப்பற்றியது. இவைகள் எல்லாம் இந்தக் கேள்வியில் எழுவில்லை.

Improvement of Javvadu Hills area

* 339 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI) கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஜவ்வாது மலைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

14th March 1960]

(ஆ) அங்கு நல்ல பாதைகள் அமைக்க, மரங்கள் வளர்க்க திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A net work of roads covering a distance of about 7 miles has been laid in the Javvadu Hills area in order to facilitate the extraction of Sandalwood, bamboos and firewood. Rest houses have also been constructed, where necessary, for the use of the inspecting officers. Schools have also been opened for imparting education to the Malayalees, who are the ancient inhabitants of that area.

(b) It is proposed to lay fresh roads covering a distance of about 10 miles. About 2,313 acres have so far been planted with fuel and commercial species and further areas will be taken up for planting in due course.

SRI S. M. ANNAMALAI : ஸார், ஜவ்வாது மலையில் சந்தன மரங்களும் வளருகின்றன. அவற்றில் இப்போது நோய் அதிகமாக பரவியிருக்கின்றன. அவற்றைத் தடுத்து இன்னும் அதிகமாக சந்தன மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சந்தன மரங்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. அதோடு அதிலுள்ள நோயை தடுப்பதற்காக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இருந்தாலும் ஆராய்ச்சி பூர்த்தியாய்விட்டது என்று சொல்லுவதற்கில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : ஜவ்வாது மலையில் மரம் நடும் திட்டத்தில், புளியின் விலை இப்போது அதிகமாக ஏறிக்கொண்டுப் போவதால், புளிய மரங்களை அதில் அதிமாக வளரச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜவ்வாது மலையில் தான் புளியமரம் நடவேண்டும் என்பது அவசியமில்லை. காட்டு இலாகாவின் மூலமாக எல்லா இடங்களிலும் புளிய மரங்களை அதிகமாக நடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு "அவன்யூ ட்ரீஸ்" வைப்பதில் அதிகமாக புளிய மரங்களை நடவேண்டும் என்று கனம் மதிப்பிற்குரிய மராமத்து இலாகா அமைச்சர் அவர்களிடமும் கேட்டிருக்கிறேன்.

DEPUTY SPEAKER : Questions 340 and 342 are postponed.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Why, Sir, when the Hon. Minister is there?

DEPUTY SPEAKER : The Hon. Minister wanted some time to answer them. Therefore, they have been postponed.